

22.01.2025 அன்று புதுதில்லியில் இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களை தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் சந்தித்து திருச்சி மாவட்டம் மணப்பாறையில் வருகின்ற ஜனவரி 28 முதல் பிப்ரவரி 3 வரை நடைபெறவுள்ள பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி குறித்த தகவல்களை தெரிவித்து, தற்போது நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளின் நிலை குறித்து எடுத்துரைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.1.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொல்லியல் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பல்வேறு ஆய்வு நிறுவனங்களுக்கு மாதிரிகளை அனுப்பி கூர்ந்து ஒப்பாய்வு செய்ததில் இப்போது கிடைத்திருக்கும் கதிரியக்கக் காலக் கணக்கீடுகள் மற்றும் OSL பகுப்பாய்வு காலக்கணக்கீடுகள் அடிப்படையில் கி.மு. 3345–லேயே, தமிழ் நிலப்பரப்பில் இரும்பு அறிமுகமாகி விட்டது என்பதற்கான ஆய்வு முடிவுகளை வெளியிட்டார்.





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.1.2025), ஏப்ரல் 2025ல் நடைபெற உள்ள எவரெஸ்ட் எக்ஸ்பெடிஷனில் (எவெரெஸ்ட் பயணம்) கலந்து கொள்ள உள்ள தமிழ்நாடு வீரர் யு.ஆஷிஷ்க்கு ரூ.5 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.1.2025), இந்தியாவில் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் மதிப்புமிக்க விருதான அர்ஜுனா விருது பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்குவாஷ் விளையாட்டு வீரா அபய் சிங், பாரா பேட்மிண்டன் வீராங்கனைகள் செல்வி. துளசிமதி முருகேசன், செல்வி. நித்யா ஸ்ரீ சுமதி சிவன், செல்வி. மனிஷா ராமதாஸ் ஆகியோரை பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.1.2025), சென்னையில் வருகின்ற பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள ஏ.டி.பி. டென்னிஸ் போட்டியை நடத்துவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ. 1 கோடிக்கான காசோலையை தமிழ்நாடு டென்னிஸ் சங்க தலைவர் விஜய் அமிர்தராஜ் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் தமிழ்நாடு டென்னிஸ் சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### அர்ஜுனா விருது பெற்ற

# தமிழ்நாட்டு வீரர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

## தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பாராட்டு!

சென்னை, ஜன. 25 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நடைபெற உள்ள ஏ.டி.பி டென்னிஸ் போட்டிக்காக தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ. 1 கோடிக்கான காசோலை மற்றும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.14.48 லட்சம் மதிப்பில் அதிநவீன பந்தய சைக்கிள்கள் மற்றும் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க செலவீன தொகைக்கான காசோலைகளை வழங்கி, இந்தியாவின் மதிப்புமிக்க அர்ஜுனா விருது பெற்ற தமிழ்நாடு வீரர், வீராங்கனைகள் மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளை பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார்.

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 23.01.2025 அன்று சென்னையில் வருகின்ற பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள ஏ.டி.பி டென்னிஸ் போட்டிக்காக தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ. 1 கோடிக்கான காசோலை மற்றும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.14.48 லட்சம் மதிப்பில் அதிநவீன பந்தய சைக்கிள்கள் மற்றும் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க செலவீன தொகைக்கான காசோலைகளை வழங்கி, இந்தியாவின் மதிப்புமிக்க அர்ஜுனா விருது பெற்ற தமிழ்நாடு வீரர், வீராங்கனைகள் மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர், வீராங்க னைகளை பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார்.

இன்றைய நிகழ்வில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் வருகின்ற பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள ஏ.டி.பி. டென்னிஸ் போட்டியை நடத்துவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ. 1 கோடிக்கான காசோலையை தமிழ்நாடு டென்னிஸ் சங்க தலைவர் விஜய் அமிர்தராஜ் அவர்களிடம் வழங்கினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில், ஏப்ரல் 2025ல் நடைபெற உள்ள எவரெஸ்ட் எக்ஸ்பெடிஷனில் (எவெரெஸ்ட் பயணம்) கலந்து கொள்ள உள்ள தமிழ்நாடு வீரர் யு.ஆஷிஷ் அவர்களுக்கு ரூ.5 லட்சத்திற்கான காசோலையும், தோஹாவில் நடைபெற உள்ள வாள்சண்டை போட்டியில் கலந்து கொள்ள ஸ்ரீ.சரவணன் அவர்களுக்கு ரூ.1.40 லட்சத்திற்கான காசோலையும், பன்னாட்டு அளவிலான சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ள செல்வி. ஆர். ஷாச்சி சாய் அவர்களுக்கு ரூ.70 ஆயிரத்திற்கான காசோலையும், சைக்ளிங் விளையாட்டு வீரர்களான ஸ்ரீநாத் லட்சுமிகாந்த் மற்றும் பி.பிரதீப் ஆகிய இருவருக்கும் மொத்தம் ரூ. 7,38,403/ செலவில் அதிநவீன பந்தைய சைக்கிள்களையும் வழங்கினார்.

இந்தியாவில் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் மதிப்புமிக்க விருதான அர்ஜுனா விருது பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த அபய் சிங் (ஸ்குவாஷ்), செல்வி. துளசிமதி முருகேசன் (பாரா பேட்மிண்டன்), செல்வி. நித்யா ஸ்ரீ சுமதி சிவன் (பாரா பேட்மிண்டன்) மற்றும் செல்வி. மனிஷா ராமதாஸ் (பாரா பேட்மிண்டன்) ஆகியோருக்கு துணை முதலமைச்சர் அவர்கள் பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்தார்.

மேலும் இன்றைய நிகழ்வில் தேசிய அளவிலான கூடைப் பந்து போட்டி மற்றும் தேசிய அளவிலான கையுந்து போட்டி, இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டு கூட்டமைப்பு (SGFI) நடத்திய 68வது தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தேசிய கூடைப் பந்து போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டின் 60 வீரர், வீராங்கனைகள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வக்ஃப் திருத்த மசோதா: அவசரகதியில்

# நாடாளுமன்றக் கூட்டுக்குழுக் கூட்டத்தை நடத்துவதா?

## கூட்டுக்குழுத் தலைவருக்கு ஆ.இராசா எம்.பி. கடிதம்!

புது தில்லி, ஜன. 25-

வக்ஃப் திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டத்தை அவசரகதியில் ஜன. 24, 25 ஆகிய தேதிகளில் நடத்தாமல் ஜன.30, 31 ஆகிய தேதிகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று அக்குழுவின் உறுப்பினரும் திமுக எம்.பி.யுமான ஆ.ராசா வலியுறுத்தினார்.

இது தொடர்பாக ஜேபிசி குழுவின் தலைவர் ஜகதாம்பிகா பாலுக்கு ஆ.ராசா புதன்கிழமை எழுதியுள்ள கடிதத்தில், 'ஜன. 21-ஆம் தேதியன்றுதான் ஜேபிசி குழு உறுப்பினர்கள் பாட்னா, கொல்கத்தா, லக்னௌ ஆகிய இடங்களில் கருத்துக்கேட்பு கூட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு ஊருக்குத் திரும்பினர். எவ்வித



முன்னறிவிப்பு மற்றும் ஆலோசனையின்றி திடீரென்று அவசரகதியில் குழுவின் கூட்டம் ஜன. 24, 25 ஆகிய தேதிகளில் நடத்தத் திட்டமிட்டிருப்பது விசித்திர மானது.

விசாரணையின்போது சேகரித்த தகவல்கள், தரவுகளை ஒருங்கிணைத்து மசோதாவில் முன்மொழியப்படும் திருத்தங்கள் தொடர்பாக உறுப்பினர்கள் ஜன.22-ஆம் தேதிக்குள் தெரிவிக்க கூறியிருப்பது இயலாத ஒன்று.

எனவே, ஜன.30, 31-ஆகிய தேதிகளுக்கு ஜேபிசியின் அடுத்த கூட்டத்தை திட்டமிட வேண்டும். ஜன. 31-ஆம் தேதி நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உரையாற்றுவார் என்பதால் அதன் பிறகு அன்றைய தினத்தில் குழுவின் கூட்டத்தை நடத்தலாம் என பெரும்பாலான உறுப்பினர்கள் குழுவின் தலைவரான உங்களிடம் தெரிவித்தனர்.

எனவே, கூட்டுக் குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்படாவிட்டால், அது அமைக்கப்பட்டதன் நோக்கமே தோற்கடிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

### சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்!

சேலம், ஜன. 25 -

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்க பொதுக்கூட்டம் இன்று (25.1.2025) சேலம் கோட்டை மைதானத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு சேலம் மத்திய மாவட்டக் கழக செயலாளரும் சுற்றுலாத் துறை அமைச்சர். இரா. இராஜேந்திரன் தலைமை வகிக்கிறார்.

செவ்வாய்ப்பேட்டை பகுதி கழக செயலாளர். சி பிரகாஷ் வரவேற்று பேசுகிறார்.

இக்கூட்டத்தில் திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர்.

பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ வேலு, சென்னை. பி. மதிவாணன். மாநில மாணவரணி துணைச் செயலாளர்.இரா. தமிழரசன், தலைமை கழக தொகுதி பார்வையாளர்கள் இ.ஜி. சுகவனம்,

கழக சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் பார். இளங்கோவன்,

மாநில தீர்மானக்குழு உறுப்பினர் டாக்டர். ஏ ஆர். விவேக். மாவட்ட நிர்வாகிகள். ஜி.கே. சுபாசு, மு.கார்த்திகேயன். தலைமைச் செயற்குழு. உறுப்பினர்கள்.

சி.ராஜேந்திரன். கே.டி. மணி. தாமரைக் கண்ணன். உட்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர். பகுதி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசுகிறார்கள்.

### தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின்

# தொழில்துறையில் பெண்களின் மகத்தான பங்களிப்பை உலக நாடுகள் உற்று நோக்குகின்றன!

## டாவோஸ் நகரின் உலகப் பொருளாதார மன்றத்தில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

டவோஸ், ஜன. 25 -

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸில் நடைபெற்ற உலக பொருளாதார மன்றம் 2025 மாநாட்டில் வளர்ந்து வரும் உலகப் பொருளாதாரத்திற்காக STEM துறையில் பாலின சமத்துவத்தை ஊக்குவித்தல் என்ற தலைப்பில், தொழில்நுட்ப மையத்தில் பெண்கள் Women in Tech Hub என்ற அமர்வில் தமிழ்நாட்டை பிரதிநிதித்துவப் படுத்தி உரையாற்றிய தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர் முனைவர் டிஆர்பி ராஜா அவர்கள், திராவிட நாயகர் முதலமைச்சர் தலைமையில் தமிழ்நாட்டில் தொழில்துறையில் பெண்கள் அதிக அளவில் பங்கேற்று சாதனை படைத்து வருவது பற்றி குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் அவர் ஆற்றிய உரை வருமாறு:

“பெண்களை அதிக அளவில் ஊக்குவித்து, பணியாளர்களாக ஈடுபடுத்துவதில் தமிழ்நாடு சாதனை படைத்து வருகிறது. இந்தியா முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் அனைத்து பெண்களில் 43% பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமே. இந்த குறிப்பிடத்தக்க சாதனை, 100 ஆண்டுகளுக்கும் மேலாக சமூக நீதிக்காக போராடி, பெண்களை பொருளாதார வல்லமைமிக்க சமமான பங்குதாரர்களாக மாற்றிய திராவிட மாடல் ஆட்சியின் அடிப்படையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்களின் தொலைநோக்கு தலைமையின் கீழ், புதுமைப் பெண், விடியல் பயணம், தோழி விடுதிகள் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை போன்ற முன்னேற்றத் திட்டங்களுடன் தமிழ்நாடு இந்த மரபைத் தொடர்ந்து வளர்த்து வருகிறது, இதன் மூலம் பெண்கள் நம்முடைய பொருளாதார முன்னேற்றத்தின் முன்னணியில் இருப்பதை உறுதி செய்கிறது.

உலகம் தமிழ்நாட்டின் வெற்றியை கவனிக்கத் தொடங்கியுள்ளது, மேலும் நாங்கள் எங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் பெருமையை அடைகிறோம், இது நாங்கள் விரும்பும், inclusive growth எனும் உள்ளடக்கிய வளர்ச்சியின் பார்வையை வலுப்படுத்துகிறது.

இவ்வாறு அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் உரையாற்றினார்.




தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்**
**புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. முதற்கட்டமாக திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | திருவள்ளூர் கிழக்கு | கிரே சூட் ஹோட்டல், காக்கவாக்கம், எல்லாபுரம். |
| 27.01.2025 திங்கட்கிழமை | காலை 9.00 மணி | திருவள்ளூர் மேற்கு | டி.கே.என். ரெசிடென்சி, சென்னை நெடுஞ்சாலை, திருத்தணி. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 23-01-2025

